# மேற்பார்வையாளர் / உதவி மேற்பார்வையாளர்களுக்கான விசேட அறிவுறுத்தல்கள்

**பொதுத் தகவல் தொழில்நுட்பப் (GIT) பரீட்சை - 2018 (மூன்றாவது முன்னோடிப் பரீட்சை)**

**நிகழ்நிலை (Online) முறைமையின் கீழ் நடாத்துதல் - 2019.03.11 தொடக்கம் 2019.03.18 ஆம் திகதி வரை**

**உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உறையை திறப்பதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள படிமுறையைப் பின்பற்றுக.**

> ❖ பளிச்சீட்டு நினைவகம், DVD இறுவெட்டு, நிகழ்நிலை ஆகிய மூன்று முறைகளில் ஏதாவது ஒரு முறைமையின்மூலம் பரீட்சார்த்திகளுக்கு நுழைவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் மற்றும் பிரச்சினைகளுக்கான விசாரணை
>
> **0113661122/011-3671568/0711619807/071-0918274/077-5288014**

1. **பளிச்சிட்டு நினைவகமும் கடவுச்சொல்லும் (PEN DRIVE& PASSWORD) உறை**
   - ➢ இவ்வுறையினுள் பளிச்சிட்டு நினைவகம் (Pen Drive) ஒன்று மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.
   - ➢ 2019.03.10ஆம் திகதி இவ்வுறையைத் திறந்து பளிச்சீட்டு நினைவகத்தை Server கணினிக்கு இணைத்து சரியாகத் தொழிற்படுகின்றதாவென பரீட்சித்து, மீண்டும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பளிச்சீட்டு நினைவக உறையிலிட்டு, முத்திரையிட்டு இணைப்பு நிலையத்துக்கு கையளிக்கவும்.
   - ➢ பளிச்சீட்டு நினைவகத்தை உபயோகிப்பதன் மூலம் கணினியை உயிர்ப்பிக்க (boot) ஐந்து நிமிடங்களுக்கு மேல் செல்லுமாயின், மாற்று வழிமுறையாக DVD இறுவட்டை பயன்படுத்தவும். அதற்கான (இணைப்பு 01) இல் குறிப்பிடப்பட்டுள்ள படிமுறைகளை கையாளவும்.
   - ➢ பரீட்சைக்காக நீங்கள் பயன்படுத்த வேண்டிய பயனர் பெயர் (User Name), கடவுச்சொல் , (Password) மற்றும் URL ஆகியவை உறையிலேயே உள்ளன.

   கவனிக்குக:
   - ➢ பரீட்சைக்கு முன் சகல கணினி முறைமை நேரத்தை (System Time) நியம நேரத்துக்கு வைக்க நடவடிக்கை எடுக்கவும்.
   - ➢ எந்நேரமும் பளிச்சீட்டு நினைவகம் USB 3.0 துறை (Port) இல் இணைக்கவும்.

02. **பரீட்சார்த்திகளின் பயனர் பெயர் / கடவுச்சொல் (USER NAME / PASSWORD) உறை**

- ➢ இப்பொதியில் சகல பரீட்சைத் தினங்களுக்குமான பரீட்சார்த்திகளுக்கான பயனர் பெயர்களும் கடவுச் சொற்களும் இப்பொதியில் உள்ளன.
- ➢ 2019.03.10ஆம் திகதி திறந்த பின்னர், நாள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைக் காட்சிப்படுத்த கூடியவாறு தயார்படுத்திக் கொள்ளவும். தினமும் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை ஒவ்வொரு பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் கணினியின் முன்பாக காட்சிப்படுத்த வேண்டும்.

03. **நுழைத்திறப்பு (Quiz Password) உறை**

- ➢ ஒவ்வோர் அமர்வுக்குமுரிய **(Session)** நுழைதிறப்பு (Quiz Password) **கொண்ட உறைகள்** அடங்கியுள்ளதோடு, அவ்வுறையை ஒவ்வொரு தினமும் இணைப்பு நிலைத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ➢ **ஒவ்வோர் அமர்வும் ஆரம்பிப்பதற்கு 5 நிமிடங்களுக்கு முன்பு உறையைத் திறந்து 2 நிமிடங்களுக்கு முன்பு அதிலுள்ள நுழைவுத் திறப்பை பரீட்சார்த்திகளுக்கு காட்சிப்படுத்த வேண்டும்.**

04. **பரீட்சைக்கு முன்தினம் மற்றும் பரீட்சை நடைபெறும் தினங்களில் பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.**

(viii) தேவையேற்படின் பதிவேற்றம் செய்த விடையொன்றை நீக்கி மீண்டும் புதிய விடையொன்றைப் பதிவேற்றலாம்.

(ix) பரீட்சை நிறைவு செய்து 15 நிமிடங்களில் விடையளித்து முடிவடையின் அவற்றை Submit பண்ணமுடியும்.

(x) இப் 15 நிமிடங்களில் விடையளிக்கவோ, அவற்றைப் பதிவேற்றம் செய்யவோ முடியாது.

9. பரீட்சார்த்திகள் தமக்குரிய User Name, Password என்பவற்றைப் பயன்படுத்தி நிகழ்நிலை பரீட்சை முறைமைக்குள் நுழைந்துள்ளனரா என சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும்.

10. பரீட்சை தொடங்குவதற்கு 02 நிமிடங்களுக்கு முன்னர் White board இல் Enrollment Key காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

11. பரீட்சை தொடங்கும்போது வினாப்பத்திரத்தின் மீது கிளிக் (Click) செய்யுமாறு பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.

12. பரீட்சை நிறைவடைவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு பரீட்சார்த்திகளால் விடையளிக்கப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை தொடர்பான சாரம்சத்தை Dash Board இல் சரிபார்த்து, அவற்றை சரியாக நிறைவு செய்யாத பரீட்சார்த்திகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

13. பரீட்சைக்கு உரிய நேரம் முடிவடைந்த பின்னர் வினாக்களுக்குரிய விடைகளை Submit செய்யாத பரீட்சார்த்திகளுக்கு Submit செய்யுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

14. காலைவேளையில் பரீட்சை தொடங்கும்போது தொடுக்கப்பட்ட Server உடனான பளிச்சீட்டு நினைவகத்தின் இணைப்பு மாலைவேளை பரீட்சை நிறைவடையும் வரை துண்டிக்கப்படலாகாது. தொடர்ச்சியாக இணைப்பிலிருத்தல் வேண்டும்.

- தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள புள்ளிப்பட்டியலில் இம்முறை பரீட்சைச்சுட்டெண்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன. தோற்றாத பரீட்சார்த்திகளின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க தோற்றாமையைக் குறித்து, பாதுகாப்பாக வைத்திருந்து இறுதித் தினத்தன்று சகல புள்ளிப்பட்டியல்களையும் உரிய உறையிலிட்டு, முத்திரையிட்டு இணைப்பு நிலையத்திற்கு கையளிக்கவும்.

- வரவு இடாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னோடிப் பரீட்சை முடிவடைந்து 15 நிமிடங்களுக்குப் பிறகு பளிச்சீட்டு நினைவகத்தை Server இலிருந்து விலக்கி உரிய நாள் உறையிலிட்டு முத்திரையிடவும். இரகசிய ஆவணங்கள் மற்றும் எஞ்சிய எழுதுபொருட்களை தினமும் இணைப்பு நிலையத்திற்கு கையளித்து நிலையத்தின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வரவும்.

எச்.எம்.சரத் சந்திரசிறி
பரீட்சை ஆணையாளர்
(பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பும் பெறுபேறும்)

ஒப்பம். பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

F:\THADSI\Git 2013\2019\Super Instruction.docx

**பளிச்சீட்டு நினைவகத்தின் (Pen Drive) பயன்படுத்தி கணினியை உயிர்ப்பிக்க (boot) ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுப்பின் மாற்று நடவடிக்கையாக DVD ஐப் பயன்படுத்துக. இதற்காக பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுக.**

(i) பளிச்சீட்டு நினைவகத்தை சேவையகத்திலிருந்து (Server) அகற்றுக. (பரீட்சை முழுவதற்கும் பளிச்சீட்டு நினைவகம் தேவையில்லை).

(ii) Server கணினியை restart செய்யவும்

(iii) Server கணினியில்
My Computer (Right Click) ⟶ Computer Management ⟶ Disk Management
Select C disk or D disk (Right Click) ⟶ Shrink Volume ⟶ Enter the amount of space to shrink in MB **100 000** ⟶ Shrink

(iv) DVD ஐ உட்புகுத்தி மீண்டும் கணினியை boot செய்யவும்.

(v) Linux இடைமுகத்தில் (Interface) உள்ள Install to hard drive மீது click செய்து மென்பொருளைக் கணினியில் நிறுவுக(Install). (Install செய்வதற்குரிய மேலதிக அறிவுறுத்தல் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட GIT 2018. Examination pilot 2.0., Installation User Guide, Offline Edition அல்லது https://www.youtube.com/watch? V = hsrGUsw_oSk ஐப் பயன்படுத்துக).

(vi) Server கணினியை மீண்டும் Restart செய்க.

(vii) DVD ஐ அகற்றுக.

(viii) மென்பொருளை நிறுவும் போது தரப்பட்ட username, password ஐப் பயன்படுத்தி முறைமைக்குள் நுழைக.

(ix) server-setup கோப்பை execute செய்வதற்காக Linux Terminal ஐப் பயன்படுத்துக.
sudo /usr/bin/server-setup

(x) மென்பொருளை Install செய்யும் போது வழங்கப்பட்ட கடவுச் சொல்லை Root password ஆகப் பயன்படுத்தி உள்ளீடு செய்க.

(xi) உங்கள் நிலைய இலக்கத்தை உட்புகுத்துக.

(xii) Server கணினியை மீண்டும் Restart செய்க.

(xiii) மென்பொருள் சரியாக செயற்படுகிறதா எனப் பரிசீலித்துப் பார்த்து DVD ஐ பளிச்சீட்டு நினைவக உறையினுள் இட்டு, முத்திரை இடுக.

- உங்கள் Server இன் I.P. முகவரி 192.168.1.200 ஆகும்.
  இதற்கேற்ப Client கணினியில் host file ஐ edit செய்க.

  அல்லது

- தாங்கள், host file இல் வழங்கப்பட்ட I.P. முகவரியை Server கணினியின் I.P முகவரியாக Manual முறையில் தயாரித்துக் கொள்க.

**கணினி நிலையத்தில் இணைய வசதி போதுமானதாக இருப்பின், தாங்கள் https://www.onlineexams.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரவேசித்து பரீட்சார்த்திகளின் username, password பயன்படுத்தி பரீட்சைக்கு முகங்கொடுக்கமுடியும்.**